*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 66/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW– 1 (LW–2)***

*Name / Father's Name:* ***திரு.புஷ்பராஜன் த/பெ. அசோகன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.05.2025.**
துவக்க நேரம் 04.10 A.N
**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது திருவண்ணாமலை டிவிசனில் புதுப்பாளையம் ரேன்ச் அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.03.2020 அன்று குன்னூர் பீட்டில் வனக்காப்பாளராக பணிபுரிந்துகொண்டிருந்தபொழுது, நானும், என்னுடைய வாட்சர் ஸ்டாலின் என்பவரும் குன்னூர் கிராமத்தில் அமைந்துள்ள மலைபெருமாள் கோவில் வழிச்சாராகத்தை சுற்றி பார்க்க சென்றோம்.

2) அப்பொழுது மலைபெருமாள் கோவிலுக்கு போகும் வழியில் இருந்த விவசாய நிலத்தில் இருந்து துர்நாற்றம் வீசியது. நானும், என்னுடைய வாட்சரும் அங்கு சென்று பார்த்தபொழுது 9 மயில்கள் செத்து கிடந்தது. இது குறித்து நான் எனது உயர்அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேன். அக்கம் பக்கம் பார்த்தபொழுது, அங்கு குளோரி பைரிபாஸ் பூச்சிக்கொல்லி மருந்தின் காலியான பாக்கெட் கிடந்தது. மேலும் அங்கங்கு நெல் மணிகள் கிடந்தது. அந்த நெல்மணிகளில், அந்த குளோரி பைரிபாஸ் பூச்சிக்கொல்லி மருந்தை கலந்து சாகடித்திருப்பார்களோ என்ற எண்ணத்தில் அந்த நெல்மணிகளை சேகரித்தோம்.

3) அந்த நெல்மணிகள் மற்றும் குளோரி பைரிபாஸ் பூச்சிக்கொல்லி மருந்தின் காலி பாக்கெட்டை என் துறையை சேர்ந்த உயர் அதிகாரிகள் மற்றும்

அந்த கிராம நிர்வாக அலுவலரின் முன்னிலையில் கைப்பற்றினோம். இறந்துபோன மயில்களை பிரேத பரிசோதனை செய்வதற்காக வெட்னரி டாக்டரை அழைத்துபொழுது, கொராணா காலம் என்பதாலும், இரவு நேரம் ஆகிவிட்டதாலும் அவர் வரமறுத்துவிட்டார்.

4) இறந்து கிடந்த 9 மயில்களை இரண்டு பைகளில் எடுத்துக்கொண்டும், சேகரித்த நெல்மணிகளையும், குளோரி பைரிபாஸ் பூச்சிக்கொல்லி மருந்தின் காலி பாக்கெட்டையும் கல்ராயன் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்தோம். மறுநாள் காலையில், கால்நடை மருத்துவர் வந்து இறந்து கிடந்த மயில்களின் உடலை பிரேத பரிசோதனை செய்து, அந்த வனச்சரக அலுவலகத்திலேயே புதைத்துவிட்டனர். மேற்கண்டவாறு பிரேத பரிசோதனை செய்து, அறிக்கை தயார் செய்யும் நிலையில் இறந்துபோன மயில்களின் உடல்கள் இல்லை என்று கால் நடை மருத்துவர் என்று தெரிவித்தார்.

5) மயில்கள் இறந்து கிடந்த விவசாய நிலத்தின் உரிமையாளர் யார் என்று விசாரிக்கையில் உள்ளூர் கிராமத்தை சேர்ந்த ராமசாமி என்பவர் அந்த விவசாய நிலத்தில் மரவள்ளிக்கிழங்கு பயிர் நட்டிருந்தார் என்பது தெரியவந்தது. அவரை தொடர்புகொள்ள முயற்சித்தபொழுது அவர் அங்கு இல்லை, தலைமறைவாகிவிட்டார். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(ஸ்தல மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6) மேற்படி குற்றம் குறித்து வனச்சரக அலுவலர் கல்வராயன் வனச்சரகம் அவர்களுக்கு கடந்த 26.03.2020ம் தேதி குன்னூர் பீட் மலைபெருமாள்கோவில் சராகம் அருகே விவசாயம் செய்த நிலத்தில் மயில்கள் இறந்தது குறித்து கண்டுபிடித்த குற்றம் தொடர்பான நபர் தலைமறைவாகிவிட்டார் என்றும், அவரை பிடித்து விரைவில் நீதிமன்ற காவலில் ஆஜர்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்பது குறித்து தகவல்

தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படும் உயர் அதிகாரிகளுக்கு கொடுத்த அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி அறிக்கையில் நானும், எனது வனக்காவலர் ஸ்டாலின் என்பவரும் கையெழுத்து செய்தோம்.

**குறுக்கு விசாரணை**

1) நான் எத்தனை வருடங்களாக வனக்காப்பாளராக கல்வராயன் மலையில் பணிபுரிந்துள்ளேன் என்றால் 3 வருடங்களாக பணிபுரிந்துள்ளேன். இந்த சம்பவத்திற்கு முன்பு எத்தனை வருடங்கள் பணிபுரிந்தேன் என்றால் 6 மாதங்களாக பணிபுரிந்தேன்.

2) எங்களது வனச்சரக அலுவலகத்தில் எந்தெந்த வனஉயிரினங்களை காக்கவேண்டும் என்பது குறித்து பதிவேடு உள்ளதா என்றால் இல்லை, மயில் அட்டவணை–1ல் விலங்காக குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கென்று ஒதுக்கப்பட்ட வனப்பகுதியில் அடிக்கடி நான் ரோந்து செல்வேனா என்றால் ஆமாம் செல்வேன். அதேபோல்தான் இந்த இடத்திற்கும் சென்றேனா என்றால் ஆமாம்.

3) சம்பவம் நடந்ததாக செல்லும் அன்று எத்தனை மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் 10.00 மணிக்கு சென்றேன். என்னுடன் யார் வந்தார் என்றால் வாச்சர் வந்தார். அன்றைய தினம் எந்தெந்த பகுதிக்கு ரோந்து சென்றோம் என்றால் குன்னூர் பகுதிக்குதான் சென்றோம். நாங்கள் ரோந்து செல்லும்பொழுது என்னென்ன எடுத்துச்செல்வோம் என்றால் A4 தாள்கள் மற்றும் தேவையான பொருட்களை எடுத்துச்செல்வோம்.

4) துர்நாற்றம் வீசியதை யார் பார்த்தது என்றால் நாங்கள் இருவரும்தான் பார்த்தோம். சம்பவயிடத்திற்கு எனது உயர் அதிகாரி யார் வந்தார் என்றால் மணிகண்டன் என்பவர் வந்தார். மயில்கள் கிடந்ததாக சொல்லும் விவசாய நிலம் யாருக்கு சொந்தமானது என்று யார், எங்களிடம் சொன்னார்கள் என்றால் சம்பவயிடத்திற்கு மூன்று, நான்கு நபர்கள் வந்தார்கள், அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியவில்லை.

5) வனச்சரகத்தை சுற்றிப்பார்க்க சென்றபொழுது, சாக்குப்பை எடுத்துச்சென்றோமா என்றால் இல்லை. யார் முன்னிலையில் நெல்மணிகளை கைப்பற்றினோம் என்றால் அந்த பகுதி வி.ஏ.ஓ–வை அந்த இடத்திற்கு வரவழைத்து அவர் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த வி.ஏ.ஓ–விடம் விசாரித்து கையெழுத்து வாங்கினேனா என்றால் இல்லை.

6) கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து, மயில் இறந்துகிடந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், வி.ஏ.ஓ அறிக்கையில், வருவாய்துறை ஆவணங்களில் என்ன உள்ளதோ அதைத்தான் இவ்வழக்கில் ஆவணமாக கொடுக்கமுடியும் என்றும், அரசின் நிலத்தை தனிநபர்கள் ஆக்கிரமிப்பு செய்து விவசாயம் செய்து வருகிறார், அந்த ஆக்கிரமிப்பு செய்த நபரின் பெயர்தான் ராமசாமி. மேற்படி வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7) நாங்கள் தாக்கல் செய்துள்ள தனியறிக்கையில், நெல்மணிகள் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியின் விவசாய நிலத்தில் நெல்மணிகள் கிடப்பதாக சொல்லியுள்ளேன். வழக்கு ஆவணங்களில் எதிரியின் நிலம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

8) மயில்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பறந்துசெல்லும் பறவை என்று சொன்னால் சரிதான். ஒரு இடத்தில் உணவு சாப்பிட்டு, அதனால் ஏற்பட்ட உடல்நலக்குறைவின் காரணமாக அல்லது மருந்து சாப்பிடதன் காரணமாக உயிரிழப்பு இன்னொரு இடத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான்.

9) சம்பவயிடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்பட்ட குளோரி பைரிபாஸ் மருந்து உட்கொண்டால், அதனால் பொதுவாக மயிலுக்கோ அல்லது ஒரு பறவைக்கோ உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்று நான் அறிக்கை பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால்

சம்பவயிடத்தில் கிடந்த குளோரி பைரிபாஸ் மருந்தின் காலியான பாக்கெட்டை சேலத்தில் உள்ள அரசு உதவி வேதியியல் பகுப்பாய்வாளர் அவர்களுக்கு அனுப்பி அறிக்கை பெற்று அந்த காலிபாக்கெட்டில் குளோரி பைரிபாஸ் மருந்து இருந்தது என்றும், சம்பவயிடத்தில் கிடந்த நெல்மணிகளையும் அனுப்பி அது குறித்த அறிக்கையை பெற்று தாக்கல் செய்துள்ளேன்.

10) நான் சொல்வதுபோல் குளோரி பைரிபாஸ் மருந்தின் காலி பாக்கெட்டையும் மற்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து கைப்பற்றிய நெல்மணிகளையும் ஆஜர் எதிரியின் காட்டிலிருந்து கைப்பற்றவில்லை என்று சொன்னாலும், நாங்களே மேற்படி வழக்குச்சொத்துக்களை உருவாக்கி ஆஜர் எதிரியின் மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

11) இறந்துகிடந்த மயில்களை பிரேத பரிசோதனை செய்து, பிரேத பரிசோதனை அறிக்கையை தாக்கல் செய்யும் நிலையில், இறந்துகிடந்த மயில்களின் உடல் இல்லை என்று கால்நடை மருத்துவர் அறிக்கையில் தந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அதனால் இறப்பிற்கான காரணம் குளோரி பைரிபாஸ் மருந்தை உட்கொண்டதால்தான் மயில்களுக்கு இறப்பு ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான். புள்ளிவிவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சரிவர வழக்கினை விசாரணை செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 05.07 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.05.20 18:34:16 +0530

Judicial Magistrate No.2, Attur.